# BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்
# சென்னை தொலைபேசி மாநில சங்கம்

BSNLEU

செய்திக்கடிதம் : 5 தேதி : 21.07.2010

## BSNLஐ காக்க-அக்டோபர் 19 முதல் 21 வரை வேலை நிறுத்தம்
## தேசிய கருத்தரங்கம் அறைகூவல்

**தோழர்களே !**

BSNL அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் (JAC) முடிவுப்படி – 19.07.2010 அன்று "SAVE BSNL - SAVE NATION" என்ற முழக்கத்துடன் தேசிய கருத்தரங்கம் புதுடெல்லி மாவலங்கர் ஹாலில் நடைபெற்றது. நமது மாநிலச் செயலர் இக்கருத்தரங்கில் பங்கேற்றார்.

கருத்தரங்கிற்கு கூட்டு நடவடிக்கை குழு தலைவர் தோழர் **N.T. சஜ்வானி** தலைமையேற்க கூட்டு நடவடிக்கை குழுவின் கன்வீனர் தோழர். **V.A.N. நம்பூதிரி** வரவேற்புரையாற்றினார். அவரது உரைவில் " DOT ஆக இருந்த இத்துறையை BSNL என்ற பொதுத்துறையாக மாற்றிய போதே, இது அரசின் தனியார் மயமாக்கும் முயற்சியே என்று நாம் எதிர்த்தோம். ஏப்ரல் 20, 2010 வேலை நிறுத்தத்தின் போது அமைச்சர் தலையிட்டு, நமக்கு அளித்த வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன. அரசு BSNL க்கு தேவையான கருவிகளை வாங்குவதை திட்டமிட்டு தவிர்த்து வருகிறது. 3 ஜி ஸ்பெக்டரம், BWA அலைவரிசை ஆகியவற்றிக்கு கட்டணமாக 18500 கோடி ரூபாயை BSNL இடமிருந்து கட்டாயமாக வசூலித்துள்ளது. BSNL ன் பங்குகளை கொஞ்சம் கொஞ்சமாக தனியாருக்கு தாரை வார்த்து கடைசியில் இந்நிறுவனத்தையே அழத்துவிடச் செய்யும் வகையில் சாம்பிட்ரோடா குழு அளித்துள்ள பரிந்துரைகளை அரசு முற்றிலுமாக கைவிட வேண்டும் " என வலியுறுத்தினார். இந்த தேசிய கருத்தரங்கம் முன் வைத்துள்ள 7 கோரிக்கைகளை அரசு தீர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தி – **நாடு முழுவதும் அக்டோபர் 19 முதல் 21 வரை வெளியிருப்பு வேலை நிறுத்தத்தை நடத்துவது** என்ற தீர்மானத்தை அவர்முன் மொழிந்தார்.

இக்கருத்தரங்கினை தோழர் பாசுதேவ் ஆச்சார்யா, M.P ( CPI (M) கட்சி – நாடாளுமன்ற குழு தலைவர்) துவக்கி வைத்து பேசுகையில் " 1956 ல் இந்திய அரசு சுயசார்பான தொழில்துறை முன்னேற்றத்திற்கான கொள்கையை கையாண்டது. ஆனால் 1991 ல் புதிய பொருளாதாரக் கொள்கை என்று கொண்டுவந்து அனைத்து துறைகளையும் தனியார் முதலாளிகளுக்கும் அந்நிய மூலதனத்திற்கும் திறந்து விட்டுவிட்டது. BSNL பொதுத்துறை நிறுவனமாக மாற்றபடும் போது அரசு கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் மீறி, இன்று சாம்பிட்ரோடா கமிட்டி மூலம் 1 லட்சம் ஊழியர்களை உபரி எனக்கூறி வீட்டுக்கு அனுப்புவும் BSNL ல் பங்கு விற்பனை கொண்டுவந்து இதையும் VSNL ஐ TATA முதலாளிக்கு தாரைவார்த்தது போல பெருமுதலாளிகளுக்கு கூறுபோட்டு கொடுக்கவும் சதி செய்கிறது. இதை எதிர்த்து BSNL அதிகாரிகளும் ஊழியர்களும் ஒரே அணியில் திரண்டுள்ளது வரவேற்கத்தக்கது. உங்கள் போராட்டத்தை நாங்கள் முழுவீச்சில் ஆதரிப்போம் " என அறிவித்தார். மத்திய தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து அரசின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக நடத்த முடிவெடுத்துள்ள **செப்டம்பர் 7 வேலை நிறுத்தத்தில்** அனைவரும் பங்கேற்று வெற்றி பெற செய்ய வேண்டுமென சுட்டிக் காட்டினார்.

நமது பொதுச் செயலர் தோழர். **P.அபிமன்யு** உரையில் " Reliance போன்ற தனியார் நிறுவனங்கள், விலை குறைவான Huawei - ZTE போன்ற சீன நாட்டு நிறுவனங்களின் கருவிகளை பயன்படுத்தும்போது BSNL மட்டும் அவற்றை பயன்படுத்த கூடாது என்றும் அமெரிக்கா போன்ற மேற்கத்திய நாடுகளின் தயாரிப்பு கருவிகளையே மிக அதிக விலை கொடுத்து வாங்க வேண்டும் என அரசு வற்புறுத்துவது BSNL ஐ நஷ்டப்படுத்தும் முயற்சியே என்றும், சம்பள இழப்பு ஏற்பட்டாலும் ஏற்றுக் கொண்டு உறுதியாக இந்த வேலை நிறுத்தில் பங்கேற்போம் " என்றும் சூளுரைத்தார்.

இக்கருத்தரங்கில் கீழ்கண்ட தலைவர்களும் உரையாற்றி, வேலைநிறுத்த முடிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளனர்.

1. தோழர். **G L ஜோகி** (G.S, SNEA)
2. தோழர்.**பிரகலாத்ராய்** (G.S, AIBSNLEA)
3. தோழர்.**S.வள்ளி நாயகம்** (G.S, FNTO)
4. தோழர். **V. சுப்புராமன்** (G.S, TEPU)
5. தோழர்.**சந்தேஷ்வர் சிங்** (G.S, NFTE)
6. தோழர். **சுரேஷ்குமார்** (G.S, BSNL MS)
7. தோழர்.**ஸ்ரீவத்சவா** (G.S. BSNL WRU)
8. தோழர்.**N.D. ராம்** (அ.இ.பொருளாளர் SEWA BSNL)
9. தோழர்.**D.B. பட்வா** (G.S, AIBCTES)
10. தோழர்.**யாதவ்** (G.S, ATM BSNL)
11. தோழர்.**ஹரிசிங்** (G.S BTU BSNL)

NFTE சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலர் தோழர்.**O.P. குப்தாவும்** கலந்து கொண்டார்.

இந்த தேசிய கருத்தரங்கில் நமது கூட்டுக்குழுவின் அழைப்பை ஏற்று கலந்து கொண்ட கீழ் குறிப்பிடப்பட்ட அகில இந்திய மத்திய சங்கங்களின் தலைவர்களும் நமது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து உற்சாகப்படுத்தினர்.

1. தோழர்.**M.K.பாந்தே** (துணைத் தலைவர் CITU)
2. தோழர்.**G.L.தார்** (செயலாளர் AITUC)
3. தோழர். **சஞ்சீவரெட்டி** (தலைவர் INTUC)

மேலும் தோழர்.**பிரபீர்புர்க்யாஸ்தா** (Science Forum, New Delhi) தனது உரையில் - " இன்று BSNL பொதுத்துறையை சீரழிப்பது

1. அரசின் கொள்கை
2. TRAI நிறுவனத்தின் தனியார் ஆதரவு நிலை
3. BSNL நிறுவனத்திற்குள் வராமலுள்ள ITS அதிகாரிகளின் தவறான நிர்வாகம் – என்ற மும்முறை தாக்குதல்களை எதிர்த்து நின்று அதிகாரிகளும் ஊழியர்களும் போராடுவது BSNL ஐ காக்க மட்டுமல்ல – இந்த தேசத்தையும் காப்பதற்காகவே " என்று பாராட்டினார்.

இறுதியில் தோழர். V.A.N.**நம்பூதிரி** (JAC கன்வீனர்) நன்றியுரையுடன் கருத்தரங்கம் நிறைவு பெற்றது.

**தேசிய கருத்தரங்கத்தின் அறைகூவல்படி BSNL ஐயும் - 3 லட்சம் ஊழியர்களையும் அதிகாரிகளையும் பாதுகாத்திட அக்டோபர் 19 முதல் 21 வரை வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்க திட்டமிட்டு பணியாற்றுவோம் !**

தோழமையுடன்

**(K.கோவிந்தராஜ்)**
**மாநில செயலாளர்**

---

## நமது கூட்டணியின் (United Forum) போராட்ட அறைகூவல்

நமது கூட்டணி புதிய சம்பள மாற்றத்தில் ஊதிய நிர்ணயம் செய்வதில் ஏற்பட்டுள்ள குறைகளையும் (Anomoly) மற்றும் புதிய பதவி உயர்வுத்திட்டத்திலுள்ள பிரச்சனைகளையும் தீர்க்கச் சொல்லி பலமுறை BSNL நிர்வாகத்திடம் தெரிவித்தும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆகவே, இவற்றை உடனடியாக தீர்க்க வலியுறுத்தி கூட்டணித் தலைவர்கள் கலந்து பேசி கீழ்கண்ட போராட்ட நடவடிக்கைகளை முடிவு செய்துள்ளனர்

**5.8.2010 - கண்டன ஆர்பாட்டம்**
**12.8.2010 - நாடு தழுவிய தார்ணா**

மேற்கண்ட தொழிற்சங்க இயக்கங்களை நமது சென்னை தொலைபேசியில் சிறப்பாக நடத்திடுவோம்.

---

## BSNL ஊழியருக்கு 78.2 % IDA இணைப்பு

நமது கூட்டு நடவடிக்கைக் குழு (**JAC**) தலைவர்கள் 20.7.2010 அன்று **CMD** மற்றும் **Director (HR)** ஆகியோரை சந்தித்து **DPE** அனுமதித்த **78.2 %** இணைப்பை BSNL ஊழியருக்கு உடனே வழங்க வேண்டுமென வலியுறுத்தினர். CMD இப் பிரச்சனையை வரும் BSNL Board கூட்டத்தில் அனுமதி பெறுவதற்காக எடுத்துச் செல்வதாக உறுதி அளித்தார். விரைவில் சாதகமான முடிவு வரும் என்று எதிர்பார்க்கிறோம்.